31683

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

திரைப்படங்கள்—படப்பிடிப்பு சென்னையிலுள்ள பழைய மத்திய சிறைச்சாலை — தற்பொழுது காலியாகவுள்ளது தனியார்கள் படப்பிடிப்பு நடத்த அனுமதி — கட்டணம் நிர்ணயம் செய்தல்—ஆணைகள் வெளியிடப்படுகிறது.

தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(திதொ.2)த்துறை

அரசு ஆணை (நிலை) எண்.373 நாள் 28.08.2007

படிக்கப்பட்டது

1. அரசு ஆணை (நிலை) எண்.276, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, நாள்: 07.10.1993.
2. அரசு ஆணை (நிலை) எண்.113, செய்தி மற்றும் சுற்றுலா(திதொ.2)த்துறை, நாள் 26.06.2006.
3. கூடுதல் சிறைத் துறை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.12145/பிடபிள்யு.3/2007, நாள் 29.03.2007 மற்றும் கடித எண்.14610/ பிடபிள்யு.3/ 2007, நாள் 18.04.2007.

---

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனியார்கள் படப்பிடிப்பு நடத்த செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மூலம் ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System) நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் சிறைத் துறை இயக்குநர், சென்னை அவர்கள் சென்னையிலுள்ள பழைய மத்திய சிறைச் சாலையில் இருந்த சிறைக் கைதிகள் ஏற்கனவே புழல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், அவை தற்போது காலியாக உள்ளதாகத் தெரிவித்து, அவற்றில் தனியார்கள் திரைப்பட படப்பிடிப்பு நடத்த அனுமதி கோரியுள்ளார்கள் எனத் தெரிவித்து, சென்னை பழைய மத்திய சிறைச்சாலையில் உட்புறமும் தனியர்கள் படப்பிடிப்பு நடத்துவதற்கு அனுமதி அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், சிறைத்துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலைகள், மத்திய சிறைச்சாலைகளில் ( வெளிப்புறம் மட்டும்), திரைப்படப் படப்பிடிப்பு நடத்த கட்டணம் நாளொன்றுக்கு ரூ.3,000/— மும், சின்னத்திரைக்கு நாளொன்றுக்கு கட்டணம் ரூ.1,500/— என்றும் நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

த.பி.பா.

4. அரசின் பரிசீலனைக்கு பின், கூடுதல் சிறைத்துறை இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, சிறைத்துறை தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள சென்னையிலுள்ள பழைய மத்திய சிறைச் சாலை அமைந்துள்ள நிலத்தை வேறு துறைக்கு ஒதுக்கீடு செய்யும்வரை பழைய மத்திய சிறைச்சாலையின் உட்புறம் மற்றும் சுற்றுச் சுவருக்கு உட்பட்ட வெளிப்புறம் திரைப்படப் படப்பிடிப்பு நடத்துவதற்கு ஒரு நாள் அல்லது ஒரு நாளின் பகுதி கட்டணமாக ரூ.5,000/-மும், சின்னத்திரைக்கு படப்பிடிப்பு கட்டணமாக ரூ.2,500/-ம் நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணை இவ்வாணை வெளியிடும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.56500/நிதி(த.வ.அ.நி(ம)செ/2007, நாள் 24.08.2007 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.இராசேந்திரன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
இயக்குநர், காவல்துறை, சென்னை-4
கூடுதல் சிறைத்துறை இயக்குநர், எழும்பூர், சென்னை-8
காவல் துறை ஆணையர், சென்னை-8
தலைவர், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கம், சென்னை
தலைவர், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், சென்னை-6
தலைவர், தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் சங்கம், சென்னை-17
தலைவர், தென்னிந்திய சின்னத்திரை தயாரிப்பாளர்கள் சங்கம், சென்னை-17
தலைவர், தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பு, சென்னை-92
சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை-9
மாநில கணக்குத் தலைவர், சென்னை-9/18
அனைத்து தலைமைச் செயலகத்துறைகள், சென்னை-9
அனைத்து துறைத் தலைவர்கள்

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதித்துறை,, சென்னை-9
உள்(சினிமா-1)த்துறை, சென்னை-9
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின் அனைத்து பிரிவுகள்
இ.கோ./உதிரி படி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/9/07
பிரிவு அலுவலர்
3.9.07